

# RentSafeTO:

## தொடர்மாடிக் கட்டிடத் தரநிலைகள் திட்டம்

ரொறன்ரோக் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான, நன்கு பராமரிக்கப்பட்ட கட்டிடங்களில் வசிப்பதை உறுதி செய்தல்

# கட்டிட உரிமையாளர்/இயக்குநர் தேவைகள்

**RentSafeTO-வின் கீழ், கட்டிட உரிமையாளர்கள்/இயக்குநர்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:**

- தங்கள் கட்டிடங்களை மாநகராட்சியில் பதிவு செய்து, பின்னர் ஆண்டுதோறும் புதுப்பித்தல்
- வாடகைதாரர் சேவைக் கோரிக்கைகளைக் கண்காணித்துப் பதிலளித்தல்
- சுத்தம் மற்றும் பூச்சிகளுக்காகப் பொது இடங்களை வழங்கமாகப் பரிசோதித்தல்
- தண்ணீர், வெப்பம் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசியச் சேவைகளில் ஏற்படும் பராமரிப்பு, கழிவு, சுத்திகரிப்பு மற்றும் இடையூறுகள் ஆகியவற்றிற்கான திட்டங்களைக் கொண்டிருத்தல்
- சேவை இடையறுகள் குறித்து வாடகைதாரர்களுக்குத் தெரிவித்தல்
- வழக்கமான கட்டிட மதிப்பீடுகளுக்கு உட்படுதல்
- பொருந்தக்கூடிய அனைத்து நகரத் துணைச் சட்டங்களையும் கடைப்பிடித்தல்




**நகரத் துணை விதிகளுடன் உரிமையாளர்களும் இயக்கநர்களும் இணங்கவில்லை என்றால் அமுலாக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.**

# உங்களது அலகில் ஒரு பிரச்சினை இருந்தால் என்ன செய்வது?

உங்கள் அலகில் அல்லது பொதுவான பகுதியில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் உங்கள் கட்டிடம் சம்பந்தமாக, முதலில் அதன் உரிமையாளர்/இயக்குநரைத் தொடர்புகொண்டு சேவைக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும். உங்கள் பதிவுகளுக்காகச் சேவைக் கோரிக்கையின் ஒரு நகலை வைத்திருக்கவும்.

நியாயமான காலத்திற்குள் உங்கள் கட்டிட உரிமையாளர்/இயக்குநரிடமிருந்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால் அல்லது பிரச்சினைகள் தொடர்ந்தால், **சேவைக் கோரிக்கையைப் பதிவு செய்ய -311ஐத் தொடர்பு கொள்ளவும்.** உங்கள் குறிப்பு இலக்கத்தை வைத்திருப்பதை உறுதிப்படுத்துங்கள். உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அக்கறைகளின் அடிப்படையில், 311 அவசர சேவைக் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கும், மேலும் ஒரு துணைவிதி அமுலாக்க அதிகாரி விசாரிப்பார்.

**Toronto.ca/311 இல் 311 மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட தொடர்பு இலக்கத்தைப் பயன்படுத்தி உங்கள் கோரிக்கையின் நிலையைச் சரிபார்க்கலாம்.**

# கட்டிட உரிமையாளர்/இயக்குநர் பதிலளிக்க வேண்டிய நேரங்கள்

கட்டிட உரிமையாளர்கள்/இயக்குநர்கள் அவசரக் கோரிக்கைகளுக்கு 24 மணி நேரத்திற்குள்ளும், ஏனைய அனைத்துக் கோரிக்கைகளுக்கும் ஏழு நாட்களுக்குள்ளும் பதிலளிக்க வேண்டும். அத்தியாவசிய சேவைகளின் இடையூறு தொடர்பான கோரிக்கைகள என்றால் அவை அவசரமானவை.

## அவசரக் கோரிக்கைகள்

பதிலளிக்கும் நேரம்: 24 மணி நேரத்திற்குள்

- **தண்ணீர் இல்லை**
- **வெப்பம் இல்லை**
- **மின்சாரம் இல்லை**
- **எரிவாயு இல்லை**
- **கட்டிடப் பாதுகாப்பு மீறல்**
- **பனி மற்றும் பனிக்கட்டி அகற்றுதல்**

## வேறு கோரிக்கைகள்

பதிலளிக்கும் நேரம்: ஏழு நாட்களுக்குள்

- **பூச்சிகள் (கரப்பான் பூச்சிகள், கொறித்துண்ணிகள்)**
- **குறைந்த வெப்பம்**
- **கசிவுகள்**
- **உடைந்த அல்லது விரிசல் விட்ட யன்னல்கள், சேதமடைந்த அலமாரிகள் அல்லது உதிர்ந்த வர்ணப்பூச்சு போன்ற சொத்துச் சேதங்கள்.**
- **அழுக்கு அல்லது கறை படிந்த மேற்பரப்புகள், கிராஃபிட்டி போன்ற பொது இடங்களின் தூய்மை**
- **குப்பை அகற்றல் அல்லது புல் வெட்டுதல் போன்ற சொத்துப் பராமரிப்பு**
- **கழிவு மேலாண்மை**

# மேலதிக ஆதரவுகள் வாடகைதாரர்களுக்கு

**RentSafeTO**-வின் அதிகார வரம்பிற்குள் வராத சிக்கல்களுக்குக், கீழே கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான ஆதரவுக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

**பூஞ்சை (Mould) மற்றும் மூட்டைப்பூச்சிகள்**
ரொறன்ரோப் பொது சுகாதாரப் பிரிவு
311

**தீயணைப்புக் குறியீடு**
ரொறன்ரோத் தீயணைப்புச் சேவைகள்
அவசரத் தேவைகளுக்கு 911 என்ற எண்ணை அழைக்கவும்.
அவசரமற்ற தேவைகளுக்கு 311 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

**கட்டிட விதிமுறைகள் மற்றும் அனுமதிகள்**
ரொறன்ரோக் கட்டிடங்கள்
311

**குற்றவியல் விவகாரங்கள்**
ரொறன்ரோக் காவல்துறைச் சேவை
அவசரத் தேவைகளுக்கு 911-ஐத் தொடர்பு கொள்ளவும்.
அவசரமற்ற தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளவும் 416-808-2222

**மின்தூக்கிச் (Elevator) செயல்பாடு மற்றும் தரச்சான்றிதழ்**
தொழில்நுட்பத் தரநிலைகள் மற்றும் பாதுகாப்பு ஆணையம்
1-877-682-8772
tssa.org

**மின்சாரப் பிரச்சினைகள்**
மின்சாரப் பாதுகாப்பு ஆணையம்
1-877-372-7233
esasafe.com

**வாடகைச் சிக்கல்கள் அல்லது வழிகாட்டுதலுக்கு மேலான வாடகை உயர்வுகள்**
வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் வாரியம்
416-645-8080
tribunalsontario.ca/ltb

**வாடகைதாரர் உரிமைகள் மற்றும் குடியிருப்பு வாடகைச் சட்டம் தொடர்பான கேள்விகள்**
வாடகைதாரர்களுக்கான வக்கீல் மையம் ஒன்ராறியோ (ACTO)
acto.ca/contact

அல்லது

**சட்ட உதவி ஒன்ராறியோ (Legal Aid Ontario)**
1-800-668-8258
legalaid.on.ca

# கட்டிட மதிப்பெண்கள்

**RentSafeTO** உடன் பதிவுசெய்யப்பட்ட அனைத்துத் தொடர்மாடிக் கட்டிடங்களையும் நகரம் மதிப்பீடு செய்கிறது. இந்தச் செயல்பாட்டின் போது, பணியாளர்கள் பொது இடங்கள், இயந்திர மற்றும் பாதுகாப்பு அமைப்புகள், வாகன நிறுத்துமிடம் மற்றும் வெளிப்புற மைதானங்களின் நிலையை ஆய்வு செய்து மதிப்பெண் வழங்குகிறார்கள். மதிப்பீடுகளுக்கு இடையில், 311 வழியாகப் பெறப்பட்ட சேவைக் கோரிக்கைகளின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்ட விதிமீறல்கள், இணக்கம் எட்டப்படும் வரை இந்த மதிப்பெண்ணைக் குறைக்கும்.




**கட்டிட மதிப்பெண்களைக் கண்டறிவதற்கும், விதிமீறல்கள் பற்றி அறிந்துகொள்ளவும் QR குறியீட்டை ஸ்கான் செய்யவும்**